தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
**Tamil Study Centre, Homebush Inc.**
Postal Address: P O Box 4019, Homebush NSW 2140
www.tsch.org.au info@tsch.org.au

# தமிழறிவுப் போட்டி
# மூன்றாம் வகுப்பு
# 2016

# தமிழறிவுப் போட்டி – 2016

## ஆண்டு - 3

## ஆரம்பப்போட்டி - 30 கேள்விகள்

## முதல் சுற்று - 10 கேள்விகள்

ஒன்றுக்கு மேற்பட்ட விடைகள் தரப்பட வேண்டிய வினாக்களுக்கு அனைத்து விடைகளும் வழங்கினால் மட்டுமே சரியான விடையாகக் கருதப்படும்.

ஒவ்வொரு சரியான விடைக்கும் 10 புள்ளிகள்

எல்லா விடைகளையும் தரத்தவறினால் பிழையான விடை எனக் கருதப்பட்டுப் 5 புள்ளிகள் கழிக்கப்படும்.

# முதற் சுற்று

# 10 கேள்விகள்

1. மெய் எழுத்துக்கள் எத்தனை?

1. விடை:

18

2 முடிக்கவும்:

அறம் செய்ய விரும்பு ஆறுவது -----------

2 விடை: சினம்

3. முக்கனிகளில் ஒன்று பலா. மற்றொன்றின் பெயரைக் கூறுக?

3. விடை: மா

வாழை

4 முத்தமிழ் எவை?

# தமிழறிவுப் போட்டி – 2014

4 விடை:

இயல், இசை, நாடகம்

5. பொருட்களை வாங்கி விற்பவரை எப்படி அழைப்பர்?

5 விடை:

வியாபாரி

6. நிகழ்ச்சிகளை அறிவிப்பவர்

# தமிழறிவுப் போட்டி - 3ம் வகுப்பு

6. அறிவிப்பாளர்

7. “நண்பன்” இதற்கு வேறு சொல் என்ன?

7. விடை:  தோழன்,  சினேகிதன்

8. குயில் கூவும். அதுபோல மயில் என்ன செய்யும்?

8. விடை:

அகவும்

9. திருக்குறளில் உள்ள மூன்று பிரிவுகள் எவை?

9. விடை: அறம், பொருள், இன்பம்

10. கவிதைகள் எழுதுபவரை எப்படி அழைப்பர்?

10. விடை : கவிஞர், கவி

முதற் சுற்று முடிவடைந்தது.

இரண்டாம் சுற்று 10 கேள்விகள்

11. கப்பல் ஓட்டுபவரை எப்படி அழைப்பார்கள்

11. விடை:

மாலுமி

12. “வீரன்“ இதற்கு எதிர்ச் சொல் என்ன ?

12. விடை: கோழை

13. திருக்குறளில் எத்தனை குறள்கள் உள்ளன?

13. விடை: 1330

14. திருக்குறளை எழுதியவர் யார் ?

14 விடை:

திருவள்ளுவர்

15. ஆத்திசூடியை எழுதியவர் யார்?

15. விடை: ஔவையார்

16. ஒரு வருடத்தில் எத்தனை மாதங்கள் இருக்கின்றன?

16. விடை: 12 மாதங்கள்

17. கண், காது, மூக்கு, வாய், உடல் இந்த ஐந்து உறுப்புக்களையும் எப்படி அழைப்போம்?

17. விடை:

ஐம்பொறிகள்

18. சிலப்பதிகாரத்தின் கதாநாயகி யார்?

18 விடை: கண்ணகி

19. எதிர்ச் சொல் தருக:

மகிழ்ச்சி

19. விடை: துக்கம், கவலை

20. இது ஒருதோல் கருவி. கோயில்களில் இதைக் காணலாம். இது என்ன?

20. விடை: மேளம்

இரண்டாம் சுற்று முடிவடைந்தது.

மூன்றாம் சுற்று 10 கேள்விகள்

21. பத்திரிகைக்குச் செய்தி சேகரித்துக் கொடுப்பவரை எப்படி அழைப்பர்.

21. விடை: நிருபர்

22. எதிர்ச் சொல் தருக:

தோல்வி

22. விடை: வெற்றி

23. இவர் நீதிமன்றத்தில் தீர்ப்புக் கூறுபவர். இவர் யார்?

23. விடை: நீதிபதி

24. குழம்பியிருக்கும் இந்தச்சொல் என்ன?

வ ல பு ர்

24. விடை:

புலவர்

25. கண்ணகி எரித்த நகரம் எது?

1. திருச்சி
2. மதுரை
3. சென்னை

25. விடை:

மதுரை

26. ஆண்பால் “அவன்”.

பெண்பால் என்ன?

26. விடை:

அவள்

27. எனக்கு என்ன உறவு?

என் அப்பாவின் தம்பியின் மனைவி?

27. விடை: சித்தி

28. எதிர்ச்சொல் தருக

ஏழை

28. விடை:

பணக்காரன்

29. கவிச்சக்கரவர்த்தி யார்?

29. விடை:

கம்பர்

30. விமானி என்பவர் யார்?

30. விடை:

விமானம் ஓட்டுபவர்

மூன்றாம் சுற்று முடிவடைந்தது.

அரை இறுதிச் சுற்று

15 கேள்விகள்

1. பாடகர் என்பவர் யார்?

1. விடை:

பாட்டுப் பாடுபவர்

2. ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்று சிலப்பதிகாரம். மற்றொன்று கூறுக?

2. விடை:

மணிமேகலை

வளையாபதி,

குண்டலகேசி,

சீவகசிந்தாமணி.

3. மிளகாய்ப்பழம் உறைக்கும் அதுபோல வாழைப்பழம் என்ன செய்யும்?

3. விடை: இனிக்கும்.

4. என் அப்பாவின் தங்கையின் கணவன் எனக்கு என்ன உறவு?

4. விடை: மாமா

5. ‘கவலை” இதற்கு எதிர்ச் சொல் என்ன?

5. விடை: இன்பம், குதூகலம்

6. தமிழ் வருடப் பிறப்பு எந்த மாதத்தில் வருகிறது?

6. விடை:

சித்திரை (தை என்று சொன்னாலும் ஏற்கலாம்)

7. இவர் மாணவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பவர். இவர் யார்?

7. விடை: ஆசிரியர்

8. புலிக் கொடியை உடைய தமிழ் மன்னன் யார்?

8. விடை: சோழன்

9. தமிழ்மறை என்று எந்த நூலைக் குறிப்பிடுவர்?

9. விடை: திருக்குறளை

(முப்பாநூல்)

10. பின்வரும் சொல்லினுள் இன்னுமொரு சொல் இருக்கிறது. அது கிழமையைக் குறிக்கும். அது எது?

**ஆரவாரம்**

10. விடை : வாரம்

11. “சூரியன்” இதற்கு வேறு சொல் என்ன?

11. விடை: ஞாயிறு, பகலவன்

12. இவர் காவல் செய்பவர்.

இவர் யார்?

12. விடை:

காவல்காரன்

13.

பின்வருவனவற்றுள் ஒன்று வேறுபடுகின்றது. அது எது?

1. வேட்டி
2. சேலை
3. பாவாடை
4. மணிக்கூடு

13. விடை:

**4. மணிக்கூடு**

14. நான் ஒருபறவை.
நான் தோகை விரித்து ஆடுவேன்.
நான் யார்?

14. விடை:

மயில்

15.

இந்த மாதம் ஆவணி.

சென்ற மாதத்தின் பெயர் என்ன?

15. விடை:

ஆடி

அரை இறுதிப்போட்டி முடிவுற்றது

# இறுதிப்போட்டி

# 15 கேள்விகள்

Year 3 - 2016

1. தமிழ் மொழிக் கல்வி தரும் ஹோம்புஷ் எனத் தொடங்கும் பாடலை எழுதியவர் யார்?

1. விடை:

எமது **ஆசிரியர் ச. தேவராசா**

2. பசுவின் இளையது கன்று.

அதுபோல

ஆட்டின் இளையது என்ன?

2. விடை: குட்டி

3. நிறைவு செய்க

அறம் செய்ய விரும்பு ஆறுவது -----------

3. விடை:

சினம்

4. கடிதங்களை வீடுவீடாகச் சென்று கொடுப்பவர் யார்?

4. விடை: தபாற்காரர்

5. ‘பொய்” இதற்கு எதிர்ச் சொல் என்ன?

5. விடை: மெய், உண்மை

6. நாய் குலைக்கும்.

குதிரை .................

1. பிளிறும்
2. கனைக்கும்
3. அழும்
3. சிரிக்கும்

6. விடை:

   2. கனைக்கும்

7. சொல்லினுள் சொல் - இரண்டு சொற்களைக் கண்டு பிடிக்கவும்!

மதுரை

7. விடை: மது

துரை

மரை

(ஏதாவது இரண்டு)

8. வசனமாக ஒழுங்குபடுத்திக் கூறுக:

பாராட்டினான் கண்ணன் ஆடைகளைப்

தங்கையின்

8. விடை:

கண்ணன் தங்கையின் ஆடைகளைப் பாராட்டினான்.

9. எமது கல்வி நிலையக் கீதத்தின் முதல் இரு வரிகளையும் கூறுக?

9. விடை:

தமிழ் மொழிக் கல்வி தரும் ஹோம்புஷ் தமிழ்க் கல்வி நிலையம் வாழ்க

10. குறளை முடிக்கவும்

குழல் இனிது யாழ் இனிது என்பதம்
மக்கள் --------- -------------

10. விடை:

மழலைச் சொல் கேளாதவர்

11. இது காய்கறி வெட்டஉதவும். அது எது?

1. கத்தி
2. சட்டி
3. அடுப்பு
4. பானை

11. விடை: கத்தி

11. இயல், இசை, நாடகம் இதனை எப்படி ஒரு சொல்லில் அழைப்பர்?

11. விடை: முத்தமிழ்

12. சிலப்பதிகாரத்தை எழுதியவர் யார்?

12. விடை:

- இளங்கோ அடிகள்

13. ஒருவரைப் பாராட்டி நடாத்தும் விழா என்ன?

13. விடை:

பாராட்டுவிழா

14. “பள்ளிக்கூடம்” இதற்கு வேறு சொல் என்ன?

14. விடை: பாடசாலை, கல்லூரி

15. இடைவெளியை நிரப்புக.

சிங்கம் வருவதைக் கண்ட மான் _________ ஓடியது.

15. விடை:

வேகமாக, பாய்ந்து, பயந்து

இறுதிப்போட்டி  நிறைவுற்றது.

நன்றி

# மேலதிக வினாக்கள் தேவைப்பட்டால்.........

1. குதிரையில் சவாரி செய்யலாம்.
   நீச்சல் குளத்தில் என்ன செய்யலாம்?

1. விடை:

நீந்தலாம்

2. நீண்ட கழுத்துடைய மிருகம் எது?

2. விடை:

ஒட்டகச்சிவிங்கி

3. வீட்டில் சமையல் செய்யும் அறையை எப்படி அழைப்பீர்?

3. விடை:

சமையலறை

4. Stamp என்பதன் தமிழ்ச் சொல் என்ன?

4. விடை:

முத்திரை